கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

அ.வ.எண்.295/2017

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் நாள் செவ்வாய்கிழமை வா.சா.1

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | சிதம்பரசாமி | தொழில் |
| த/பெ | முத்துச்சாமிகவுண்டர் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து கடந்த 28.06.2017 தேதி பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணையில் 4859/2017 – ஆக கிரையம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குறித்து தெரியாது. பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பில் கண்ட விபரங்களை நான் தெரிந்து கொண்டேன். நான் அறிவிப்பு அனுப்புவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே 4 ம் பிரதிவாதி பேரில் கிரயம் செய்யப்பட்ட விபரத்தை கொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் மீது சந்திரன் என்பவர் கடந்த 27.03.2015 ஆம் தேதி தாராபுரம் ஆக்சிஸ் வங்கியில் ரூபாய் 35 லட்சம் கடன் பெற்று விபரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால்அது குறித்து எனக்கு தெரியாது.

2. கடன் வாங்கிய தேதியில் நான் வில்லங்கச் சான்று பெற்று அதில் வில்லங்கம் எதுவும் உள்ளதா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் அதை நான் போட்டு பார்க்கவில்லை. தாவா சொத்து ஏற்கனவே அடமானம் வைக்கப்பட்டு வில்லங்கம் உள்ளது என்ற விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே அடமானம் வைக்கப்பட்ட சொத்தின்

மீது மீண்டும் அடமான கடன் கொடுத்ததாக வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சந்திரன் வாங்கிய கடன் தொகையான ரூபாய் 35 லட்சத்துக்கு வட்டியுடன் சேர்த்து ரூபாய் 37 லட்சத்து 25 ஆயிரத்தி 604 ரூபாய் காசோலை எண் 190245 மூலம் கடந்த 24.6.2017 ஆம் தேதி செலுத்தி கடனை தீர்த்தும், பின்னிட்டு அதன் தொடர்ச்சியாக 28.6.2017 ஆம் தேதி சந்திரனின் பெயருக்கு HDFC வங்கி காசோலை எண் 190246 இல் ரூபாய் 29 லட்சத்து 74 ஆயிரத்து 396 ல் செலுத்தியும் அதே தேதியில் கோயம்புத்தூர் கிளை சிட்டி வங்கியில் காசோலை எண். 164679 இன் படி ரூபாய் 2 லட்சமும், பின்பு பொள்ளாச்சி சோமந்துறை சிட்டி வங்கி காசோலை எண் 164680 இன் படி ரூபாய் 10 லட்சத்து 50 ஆயிரமும் மொத்தம் ரூபாய் 86 லட்சம் செலுத்தி கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. மேற்படி கடனை செலுத்தி சட்டக் கருத்துறை பெற்று முறையாக கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி கிரயத்தை ரத்து செய்ய கோர எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சந்திரனின் சம்மந்தி அங்கம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. அவர்கள் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் இன்சால்வன்ட் மனு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கின் கடன் குறித்து பத்மாவதிக்கு தெரியாது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

4.நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விபரம் அல்லது அதை திருப்பி கேட்ட விபரமும் 4–ம் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. புஞ்சை தலையூர் கிராமத்தில் தாவா சொத்தை தவிர இறந்து போன சந்திரனுக்கு வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் மீது நான் தாவா தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 4–ம் பிரதிவாதி 28.06.2017 ம் தேதியில் பெற்ற கிரயத்தை ரத்து செய்ய நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.01.28 16:04:41 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.